APR 1999 PERIODICALS DIVISION

# Jaffna Christian Union

## Allocates more money for Scholarships

The Jaffna Christian Union conducted its Annual General meeting on Wednesday the 31 st March 1999 at Fig- Hall, St. John's College Jaffna. At the meeting the members gave their ap r- oval to set apart more money for scholarships.

The members also resolved to organize meetings and seminars among denominations to foster unity and bring about Union of Churches in Sri Lanka. Mr. S. Thanabalan the outgoing Chairman of the Jaffna Christian Union thanked the members profu- sely for the support given to him during the past year.

The following were elected Office Bearers for the year 1999 – 2000

Chairperson:
Rev. A. A. Paul

Vice Chairpersons:
Rev. Jeya Mather
Mr. D R. Arumainayagam

Secretary:
Rev. Gnana ' Ponrajah

Asst Secretary:
Rev. P. J. Suriakumar

Treasurer:
Mr. Ben Gunaratnam

Auditors:
Mr. Dutton Somasundaram
Mr. Noel Vimalendran


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 09th April 1999 No. 08

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


## The Memorial service held for the late Sevak Sam T. Alfred

A service of remembrance and thanksgiving, in loving memory of Prethama Sevak, the late Rev. Sam Alfred (lovingly called by all as SAM ANNAN) was held on February the 6th at 5-30 p.m at Agincourt Pentecostal Church, 2885. Kennedy Road, Scarborough. It was well attended by the friends of the Christa Seva Asham and others closely associated with Sam Annan. This service was arranged by the members of the Christa Seva Ashram Board in Canada.

The entire service was in Tamil and it was led by Mr. S. Balachandran. Lessons were read by Mrs. Athisayam Hunt (nee Sellathurai) and Mr. Stanley Arnold (a cousin of the late Sam Annan) At the opening of the Service, Mr Jeyamalar Ariyarajah led the congregation into a lovely and emotional devotional thevaram. At the end of the thevaram, the Rev. Mrs Christobelle Selvalingam of the Tamil church of the Nazarene, said the opening prayers. Two Tamil Lyrics –'இயேசுவின் பாதம் பூசை செய்திடுவோம், இயேசு ராஜனின் திருவடிக்கே'' and "How great thou art" were sung at this service. Tributes to the life of late Sam Annan were paid by Mrs. Selvaranee Thambyrajah (wife of late A R R Thamyrajah) and Mr Sellathurai.

Mrs. Thambyrajah said how they became close friends of the Ashram and their house at 16. Aloe avenue, had one room set apart for Ashram. How engineer Canagarajah and her husband planned to erect a light house at the Ashram, to be light to all who travel by train or walk along this area, so that the Ashram stands as a witness. Before the plan came through her husband died. But when it was erected it was named after her husband.

Mr. Sellathurai in his tribute made reference to the origin of the Ashram movement, and how that influenced the late Rev. Selvaratnam (Peri Annan). While Peri Annan was a student at Serampore Theological College in Calcutta, during his holday, he was visiting the Ashrams in India. From the time of the formation of the Christa Seva Ashram. Peri Annan managed it alone. Later joined Yesusahayam (Chinannan) and then Sam Annan. Though Peri Annan and Chinannan preceeded Sam Annan, it was a heavy task on Sam Annan. Further, he was diabetic at the age of eighteen. It was God's mercy, guidance, wisdom and strength, that led him all these years.

God's message was given by Pastor Daya Rasiah of the Agincourt Tamil Pentecostal Church. Responsive prayer was led by Dr. J. Balan Selliah.

Concluding prayers and blessings were pronounced by the Rev. Bobby Mather of St. Bartholomew Anglican Church

## Resolution of the JCU

The Jaffna Christian at its annual general meeting held on 31 - 03 - 99, at St. Johns' College Jaffna Unanimously passed the following resolution.

The Jaffna Christian Union expresses it thanks to Rt. Rev. Kenneth Fernando for his call, for the Unity, of the member Churches of the National Christion Council It also resolves that the member Churches of the N. C. C. should respond to this call, by working in clo e collaboration, in the Ashram Board University Chaplaincy, and Theological Education.

### *Uduvil Emerge Triple Champions*

The Divisional Netball championship matches of the Zone II schools were played at Manipay Memorial English school on the 17th of March. The under 15, 17 and 19 teams of Uduvil Girls' College Ramanathan College and Skandavarodhya College vied for the Championship. The Uduvil Girls' College trounced Skandavaroodhya College and Ramanathan College in the under 17 and 19 encounters and emerged as the Divisional Champions.

The enounter between the under 15 teams of Uduvil Girls' College and Ramanathan College was a close fight. Ramanathan College led by one point at the first half scoring 5 - 4 points. During the second half the Uduvil Girls' rallied their prowess and team spirit and had an edge over Ramanathan College by two points, score being 11—9

Miss M naka Nadarajasundaram captained the under 15 team. The under 17 and 19 teams were captained by Miss Ratha Balasundram and Miss Dharmini Chnadrapalan respectively.

### *Death of two Native Physicians*

We are sorry to record the demise of two famous native physicians which took place in last week of March 1999.

They were Dr. M. Somasundram of Kandermadam and Dr. A. Nadarajah of Chunnakam.

### *Excavate Duraiyappah Stadium graves*

The Municipal Council of Jaffna which met on 1-4-99 resolved to ask the government to excavate the Duraiyapph stadium graves immediately to find out when the burials took place at this site.

### *S J V Commemoration Service*

A Service to thank God for the life of Mr. Samuel James Velupillai Chelvanayagam was conducted at St. Johns Church Jaffna on Wednesday the 31st March at 9.00a.m The service was led by the Rev. N. S. P Nesakumar. The Rev D. R. Ambalavanar gave the tribute and Rev Father S. Jeyaseelan preached the sermon

### *Chemmani graves to be Excavated on June 16th*

The Chemmani mass grave in which 400 bodies are feared buried will be opened on June 16th in the presence of District Judge. Corporal. Somarame Rajapakse will be brought from Colombo to identify the places of burial

(Uthayan 02-04-99)

### *Rt Rev Kenneth Fernando*

The Rt. Rev. Kenneth Fernando Anglican Bishop of Colombo will be visiting Jaffna on the 9th 10th 11th and 12th of April. He will solemnize the wedding of the Rev. N. S. P. Nesakumar which will take place on 10-4-99 at St. Johns Church Jaffna.

## AIDS in Jaffna

A person from the Islands of. Jaffna died on the first of April. In May 1998 it was diagnosed that he was having AIDS It is feared that his wife too has now contacted AIDS. So far four persons in Jaffna have lost their lives by contacting AIDS

## New Chairpersons

During the course of this term Chairpersons were elected for there ecumenical bodies in Jaffna. Their names are as follows.

Ashram Board:
Rev. S. P. Nesakumar

University Chaplaincy
Rev. Jeya Mather

Jaffna Christian Union:
Rev. A A. Paul

### *Three injured on Arpil Fools Day*

On April fools day three persons were injured at Imayanan in the Vadamaratchy area. It is reported that a motor cyclist who lost his balance when he was sprinkled with ink ran into a push cyclist. The rider, the person who was on the pillion and the push cyclist are now undergoing treatment at teaching hospital Jaffna.

# துன்பம் ஏன்?

''சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோக்கிற்பவர்க்கு'' தீயில் இட்டாலும் தங்கம் தன்னிலை மாறாது. தரத்தில் உயர்நிலை அடைவது போல் எத்தனை துன்பம் தொடர்கதையாய்வரினும் நிலை குலையாது நிற்பவரே பெருமை அடைவர் என்பது திருக்குறள் தரும் சிந்தை இச்சிந்தை எல்லாச் சமயங்களிலும் இழையோடி நிற்கின்றது.

துன்பத்தைக்கண்டு புறமுதுகு காட்டி ஓடாமல் துன்பத்தை எதிர்த்து நின்று துன்பத்துக்குள்ளும் இறைநீதியைக்காண ஆசைப்படுபவனே இறையன்பன். அன்பர்க்கு அருள்செய்யும் இறைவன் அன்பர்களை சோதித்து அறிந்து சாதனை படைத்தவர்கள் என்று சான்றிதழ் தருபவர் என்பதையும் சமய நூல்கள் அறியத்தருவது சிறப்புடையது.

சேக்கிழார் சுவாமிகள் தனது பெரிய புராணத்தில் இறையன்பர்களின் துன்ப வரலாற்றையும் அவர்தம் வாழ்வின் நிலைகுலையாமையையும், தலை நிமிர்ந்து நிற்கும் தனித்தன்மையையும். உலகியல் வாழ்வில் உள்ளவர்கள் உணர்ந்து உய்ய வழி காட்டி வைத்தார்.

சிறுத்தொண்டர் இவர் இறை அடியார்க்கு உணவு வையாது உணவு அருந்தாதவர். நாள் ஒன்று வந்தது அடியவர் யாருமே வரவில்லை. தொண்டர் தேடினார். களைத்தே பேய்விட்டார். இறைவன் கபாலி வடிவில் வந்து விருந்து கேட்கிறார். அவர் பசியாறக் கேட்ட விருந்து தவம் இருந்து தொண்டர் பெற்றெடுத்த பிஞ்சுக்குழந்தை. ஆண் குழந்தை அழகுக் குழந்தை.

தொண்டரும் மனைவியும் துடிக்கத் துடிக்க குழந்தையை வெட்டி கறி சமைத்து விருந்து வைத்தனர் ''விருந்து உண்ண வேண்டுமானால் உனது மகனும் விருந்தில் அமர்ந்து உண்ண வேண்டும் கூப்பிடு அவனை'' என்றார் வந்தவர்:

தொண்டரின் மனம் நிலை குலையவில்லை. அலைபுரண்டு துன்பம் வரினும் அன்பர்க்கு அருள் செய்பவன். அழியாப்பெரு வாழ்வு தருவான். துணிந்தார் துணைவியுடன் வீட்டு வாசல் படிக்கு வந்தார். கூப்பிட்டார். சீராளா! என்று உரக்கக் கூப்பிட்டார். இருவரும் ஏகோபித்து கூப்பிட்டார்கள். பள்ளிப்பாலன் துள்ளிக்குதித்து வந்து குரல் கொடுத்து கூப்பிட்டட அப்பாவையும் அம்மாவையும் கட்டித் தழுவி முத்தம் செய்தான். இது என்ன அதிசயம்? இறையருள் எத்துணை வல்லது? விருந்துக்கு வந்தவர் வருந்தப் போகிறாரே என்று வருந்தியவராய் வந்தவரை வரவேற்று விருந்து வைக்க மறுபக்கம் திரும்பினார். விருந்து கேட்டவர் விருந்து படைக்க விரும்பியவருக்கு சான்றிதழ் தந்து விட்டு மறைந்து விட்டார். இளையதலை முறையே நடக்க முடியாத ஒன்றை நாடகவடிவில் அமைத்து வைத்த சேக்கிழார் சுவாமிகளை எப்படி நம்புவது என்று கூறித் தூக்கி எறியாதீர்கள்! இறை அடியார்களின் வரலாறு அதிசயமானது அற்புதமானது அவர்கள் இறைவனிடம் கொண்ட அன்பு துன்பம் வந்த போதும் நிலைகுலையாத தனித்துவமானது. நம்புங்கள் புதிய உலகம் படைக்கப் புறப்படுங்கள்.

தொண்டரும் துணைவியும் செய்து முடித்த செயலை அறிந்திருந்தும் மகனைக்கூப்பிடு என்று விருந்துக்கு வந்த அடியவர் கூறலும் எதிர்பேசாது கூப்பிட்டார்கள். அவர்களின் கூப்பிடு தலை எல்லாம் வல்ல இறைவன் கனப்படுத்தி வைத்தார் ஏன்? எதிர்கால வரலாற்று மனிதத்தை பெலப்படுத்துவதற்காக நம்புங்கள்! விசுவாசியுங்கள்!! முன்னோக்கி உங்கள் காலடிகளை எடுத்து வையுங்கள்.

துன்பம் என்பது இன்பமான வரலாற்று நன்மைகளைத்தரும் பெருவாசல் என்று அறியுங்கள். துன்பம் வந்தாலும் இறைவனைப் பற்றிய தெளிந்த அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள். இறைவனுடைய அறிவைப்பெற்று இறைவனுடைய உறவில் ஒட்டி வாழும் ஒவ்வொரு வருடைய சொற்களையும் இறைவன் கனப்படுத்துவார். விவிலியத்தின் தொடக்க நூலில் இருபத்திஇரண்டாம் அதிகாரத்தின் முதலாம் வசனத்தில் படிப்பது ''தேவன் ஆபிரகாமை சோதித்தார்'' தன்னிடம் இருந்த ஆபிரகாம் என்னும் பெறுமதியான தங்கத்தை அக்கினியிலே போட்டார். அழிப்பதற்காக அல்ல தரத்தில் உயர்த்துவதற்காக.

முதிர்ந்த வயதில் பெற்றெடுத்த அதாவது கர்ப்பம் வெறுமையான போது பெற்றெடுக்க ஒன்றுமில்லாமையிலும் ஒழுங்கு அற்றதுமான ஒரு நிலையில் பெற்றெடுத்த ஒரே ஆண்பிள்ளையை பலி செலுத்தும் படி அடியவர் ஆபிரகாம் கேட்கப்படுகின்றார். துணிந்து விட்டார். பணிவு என்பது எப்போதும் துணிவை உண்டாக்கும். இது வரலாறு தரும் உண்மை.

பிள்ளை விறகு நெருப்பு சத்தி எல்லாவற்றோடும் கழுதையோடும் வேலைக்காரரோடும் பலி செலுத்தும் இடம் நோக்கி வயதில் முதிர்ந்தவர் வீரனைப் போல வேக நடை போட்டு வருகிறார் நிலைகுலையவேயில்லை

இடம் வந்தது. கழுதையையும் வேலையாட்களையும் ஓர் இடத்திலே விட்டுவிட்டு வேலையாட்களுக்குச் சொல்லுகிறார். அதிகாரம் இருபத்தி இரண்டு வசனம் ஐந்தின் இறுதிப் பகுதி ''உங்களிடத்துக்கு நாங்கள் திரும்பி வருவோம்.

அடுத்து இருவரும் நடந்து செல்கிறார்கள். மகன் ஈசாக்கு கேட்கிறான் வசனம் ஏழு 'தகன பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?' முதிர்ந்த அடியவர் பதில் தருகின்றார். வசனம் எட்டு தேவன் தமக்கு தகன பலிக்கான ஆட்டுக் குட்டியை பார்த்துக் கொள்வார்.

இரண்டு பதில்கள் ஆபிரகாமிடத்தில் இருந்து வந்தன இவ் வசனங்களில் இருந்த தெளிவை இறைவன் அறிந்தார். அறிந்தவர் ஆபிரகாம் தன் மகனுக்கு கூறிய பதிலை நிறைவாக்கினார். வசனம் பதின்கடா ஒன்று புதரில் சிக்குண்டு கிடந்தது: தகனபலி செலுத்தப்பட்டது.

தந்தையினுடைய தனித்துவமான விசுவாசத்தையும் அதனால் ஏற்பட்ட நிலைகுலையாமையையும் துணிவை மகன் கண்டான். அவன் கண்டது மட்டுமல்ல தன்னை வாக்குத்தத்தத்தின் மகன் என்பதையும் அறிந்து கொண்டான். தந்தையின் சொல்லில் இருந்த இறைவன் பற்றிய தெளிவு இவை யெல்லாம் ஈசாக்குக்குள் ஊசி மருந்து போல உட்செலுத்தப்பட்டுவிட்டது: இது மட்டுமன்றி வேலைக்காரருக்கும் ஆபிரகாம் சொல்லிச் சென்ற விடை தடைபட்டுப் போகாமல் உண்மையுடையதாகின்றது.

ஆபிரகாம் மகனைப்பலியீட்டு தனிமையாக வந்திருந்தால் அவர் சொல்லிய வார்த்தை பொய்யாக இருந்திருக்கும். வார்த்தை பொய்யாக இருந்திருந்தால் முதிர் வயதுடைய ஆபிரகாம் வெட்கப்பட்டு போய் இருப்பார். கர்த்தரை நம்பியவர்கள் ஒருக்காலும் வெட்கப்பட்டதே இல்லை.

இளைய தலை முறையினரே முதிர்வயதுடைய இறையடியார் ஒவ்வொருவருடைய பல்கலைக் கழக விரிவுரைகள் என்று அறியுங்கள். இறையடியார்களுடைய ஒவ்வொரு சொல்லையும் பேச்சையும் இறைவன் கனப்படுத்துவார் என்று அறிந்து இறை உறவிலே வாழ்ந்து மறைநூல் அறிவை உண்டு உள்வாங்கிக் கொண்டு முதியோருடன் இணைந்து இறை அடியவரைப் பின் தொடர்ந்து உலகம் படைக்கப் புறப்படுங்கள் இரண்டாயிரமாம் ஆண்டு புது உலகம் ஆகட்டும்.

**A. V. இயேசுதாசன்**
மானிப்பாய் திருச்சபை ஊழியன்

## எஸ் ஜே எழுதுவது

அன்பு செலுத்துகிறேன். அவர் எனக்கு காட்சி கொடுத்திராவிட்டால் எப்போவோ அழிந்து. போயிருப்பேன். இப்போழுது எனது உள்ளத்தில் அவருக்கு மறைவான எந்த எண்ணமும் இல்லை யென்று குதூகலம் அடைகின்றேன். ''மாம்சத்தினால் ஆன சரத்திலன்றி அவரிலேயே நம்பிக்கை வைக்கிறேன். வாக்கு மாறாத அவரிலேயே என் பற்றுறுதியை நிலைப் படுத்துகிறேன்'' நாளை திருவிருந்து நாள்! சுடவுளே எனக்கு விசுவாசம் நிறைந்த உள்ளத்தை தா என்று வேண்டிக் கொண்டிருக்கிறேன். திருவிருந்தில் பங்குபற்றும் அனைத்து ஆத்துமாக்களுக்கும் உமது பிரசன்னத்தின் ஆசீர்வாதத்தை வழங்கி யருளும்'

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆

என் உடன் சேர்ந்துள்ள மக்கள் கூட்டத்தினர் தெளிந்த நோக்கின்மையால் அழிந்து படுவதனையும் நான் சுவிசேட பிரபல்யத்திற்கு எவ்விதபங்களிப்பும் செய்யாமல் வசதியாக வாழ்வதனையும் நினைக்குங்கால் ஏழை அஞ்ஞானிகளுடன் எவ்வாழ்நாளைக் கழிக்க நான் ஓர் ஆணாக இருந்தாலோ என்ற ஆசை அரும்புகிறது. ஆனால் எல்லையற்ற பரம ஞானத்தின் எந்தவொரு திட்டத்தையும் மாற்றக் கூடாது என்று என் உள்ளத்தை கட்டுப்படுத்திக்கொள்கின்றேன். எனினும் அவர்களுக்காகவும் எனது மீட்பருக்காகவும் வேதனையையும் கஷ்டத்தையும் மகிழ்வுடன் சகித்துக் கொள்ள மனம் துடிக்கின்றது.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆☆

கர்த்தருக்கு முன்பாக அமைதியாக நடக்கவே மிகவும் விரும்புகிறேன். இந்த உயர்ந்த எண்ணத்திற்காக எல்லா விஷயங்களிலும் கட்டுப்பாடாகவும் மிதமாகவும் நடந்து கொள்ள ஆசைப்படுகிறேன். பேச்சிலும் செயலிலும் அவசரத்தை தவிர்த்துக் கொள்கிறேன். எல்லோருடனும் அன்பாகப் பழகி கதைப்பதை நிறுத்தி உரக்க பேசுவதை விட்டு ஆழ்ந்த சிந்தனை கலந்த கவலைகளை இறைவனிடம் ஊற்றி விடும் ஜெபத்தில் கூடிய நேரம் தரித்திருக்க விரும்புகிறேன்

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆☆

நீ சுகவீனத்தினால் வேதனைப் படுகிறாய் என்று அறிகிறேன். என்னை விட நீ நிதானத்தை கடைப்பிடிப்பாய் என்று எண்ணுகிறேன், நம்புகிறேன். என்னிலும் பார்க்க நீ மற்றவர்களின் ஆலோசனைகளை விருப்புடன் ஏற்றுக்கொள்வாய், அதிக காலம் வாழக்கூடாது என்ற அவா என்னுள்ளத்தில் எழுவதுண்டு. அதனாலேயே மிக மிஞ்சிய வேலையை செய்து கொண்டாலும். கவலைப்படத் தேவையில்லை என்றெண்ணியதுண்டு. கர்த்தர் நம்மீதுசுமத்தும் எந்த வேதனையையும் ஏமாற்றங்களையும் அங்கலாய்ப்புக்களையும் மற்றெந்த உபத்திரவங்களையும் நாம் மகிழ்வுடன் சகித்து கொள்ள வேண்டும். என்பது நாம் மிக மெதுவாக கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவ அனுபவத்தின் ஓர் அம்சமாக இதனைக் கூறினேன். நான் விரைவில் திரைக்கு அப்பால் சென்று விடுவேன் என்ற எதிர்பார்ப்பில் ஒவ்வொரு நாளையும் வாழ்ந்து முடிக்க வில்லை.

என்னை சூழ உள்ளவர்களை மகிழ்ச்சி அடையசெய்வதிலும் நித்தியத்திற்கு என்னை ஆயத்தம் செய்வதிலும் எனது நேரத்தை செலவிடுவது. இன்னும் அதிக வேலையை செய்ய சுகம் இடமளிக்க வில்லையே என்ற வீண் சோகத்தில் நேரத்தை வீணடிப்பதிலும் பார்க்கச் சிறந்தது

### புதிய செயற்குழு

சென்ற புதன்கிழமை 31-3-99 யாழ் பரி யோவான் கல்லூரியில் யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: வண அ அ போல்

துணைத்தலைவர்கள்:
வண ஜெயா மேதர்
திரு டி ஆர் அருமைநாயகம்

செயலாளர்:
வண ஞான பொன் ராஜா

துணைச்செயலாளர்:
வண பி ஜே சூரியகுமார்

பொருளாலர்:
திரு பென் குணரத்தினம்

கணக்குப் பரிசோதகர்:
திரு டற்றன் சோமசுந்தரம்
திரு நோவல் விமலேந்திரன்

## தாரகை ஒளி

அச்சம் மறைந்து போகின்ற பொழுதுதான். பெலன் வருகின்றது. தசைநார்களும் தடித்த சரீரமும் இருப்ப தனால். பெலன் வந்துவிடப் போவதில்லை.

-காந்தி அடிகள்

## நல்லது நடக்கும்

''அம்மையப்பா! எட்ட உருளும் மண்ணுலகத்தைப் பார்த்தருளுக! அதோ கூனிக் குறுகி மண்ணில் உட்கார்ந்து ரசவாதம் செய்கிறானே! சிற்றம்பலமான அவனது உள்ளத்திலே தேவரீர் கழலொலி என்ன நாதத்தை எழுப்புகிறது தெரியுமா? துன்பம், நம்பிக்கை வரட்சி, முடிவற்ற சோகம்''

இவை புதுமைப் பித்தன் எழுதிய 'மனக்குகை ஓவியங்கள்' என்ற சிறுகதையிலே காணப் படும் வரிகள். நம்பிக்கை வரட்சி மனிதனுக்கு வரக்கூடிய மிகப் பெரிய துன்பம். ''மலை சாய்ந்து போனால் சிலையாகலாம். மரம் சாய்ந்து போனால் விலையாகலாம் இந்த மனம் சாய்ந்து போனால் என்ன செய்யலாம்?

ஆங்கிலேயர் இந்தியாவில் ஆட்சிபுரிந்த காலத்தில் பலர் நம்பிக்கை வரட்சிக்கு அடிமையாகி விட்டனர். ஆனால் இறுதிவரை நம்பிக்கையை உள்ளத்திலே கொண்டிருந்த ஒரு சிலரினாலேதான் பாரததேசம் சுதந்திரமடைந்தது.

இன்று தமிழ் மக்களை வாட்டும் கொடிய நோய் நம்பிக்கை வரட்சியேயாகும். பெரும்பாலன மக்கள் இன்று தமிழ்ச்சாகியத்தின் வருங் காலத்தைக் குறித்துப் பேசுவதற்கே விருப்பமின்றியிருக்கின்றனர் ''ஆளை விடு', என்ற எண்ணமே இன்று எல்லாருடைய உள்ளத்திலும் தலைதூக்கியுள்ள சிந்தனையாகும்.

இதனைமாற்றுவதற்கு மக்கள் முபற்சி செய்யவேண்டும் எமது சமுதாயத்தினை விட மோசமான நிலையிலிருந்த மக்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கவில்லையா? போலாந்து இஸ்ரவேல், பங்களாதேஷ், என்பன ஒரு காலத்தில் உலகின்படத்தில் இல்லாது போன தேசங்கள்.

வலி வடக்கினை அரசினர் சுவீகரிக்கும் திட்டம் பற்றிய செய்திகள் வெளிவந்தபொழுது பலர் அதனைப்பற்றிக்கவலைப் படவில்லை. அவன் நினைத்தால் அதனைச்செய்தே தீருவான் என்று கூறிவிட்டு அமர்ந்து விடுகின்றனர். இந்த மனோநிலையிலிருந்து மக்கள் விடுதலை பெறுவதற்கு இறை நம்பிக்கை மிக அவசியம். ''தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் தருமம் மறுபடி வெல்லும்'' இது தான் உலக நியதி. ''எல்லாம் நல்ல படி நடக்கும்'' என்று உள்ளத்தை உறுதிப்படுத்துங்கள்! நல்லபடி நடக்கும் என்கிறார். நோர்மன் வின்சென்ற் பீல்



திருமதி ஹரியற் வின்சிலோ அம்மையார்

திருமதி ஹரியற் வின்சிலோ அம்மையார் 1797 ம் ஆண்டு ஏப்ரல் மாதம். 9 ம்திகதி அமெரிக்காவில் உள்ள நோர்விச் என்ற இடத்தில் பிறந்தவர். 1833 ஜனவரி 14 ல் தமது முப்பத்தேழாவது வயதில் உடுவிலில் மரித்துப் போனார்.

யாழ்ப்பாணத்தின் பெண்கள் கல்விபெற வேண்டும் என்ற இலட்சியத்திற்காகப் பாடுபட்டு உடுவில் மகளீர் கல்லூரியை நிறுவினார்.

இவரும் இவரது கணவர் மைரன் வின்சிலோவும் தலை சிறந்த மேதைகள்

வண. மைரன் வின்சிலோ தொகுத்த தமிழ் ஆங்கில அகராதிக்கு நிகரானது இது வரை உருவாக்கப்பட வில்லை. திருமதி வின்சிலோ அம்மையார் இளமையில் இறந்த பின்பு அவருடைய அன்புக் கணவர் மைரன்வின்சிலோ மனைவியின் தினக்குறிப்பை (DIARY) புத்தகவாக்கம் ஏற்றினார். பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தை அறிய இந்தினக்குறிப்பு பயன்படுகிறது. ஆராய்ச்சியாளருக்கு இனிய விருந்து. வின்சிலோ அம்மையார் உடுவிலில் அனேக கஷ்டங்களைச் சுமந்தார். ஆனால் 1832 ம் ஆண்டு அமரிக்காவிற்குப் படிக்கச் சென்ற ஒன்பது வயது சார்ள்ஸ் என்ற ஒரே மகன் புயலில் சிக்கி இறந்த பொழுது அம்மையார் நிலை குலைந்து அழுதார். ஆனால் இறைவனின் திட்டப்படியே எல்லாம் நடக்கின்றன எனக் கூறினார். சில மாதங்களுக்குள் அவரும் இவ்வுலக வாழ்வினை நீத்தார்.

வின்சிலோ அம்மையாரின் தினக்குறிப்பு நளத தைலத்தை உடைத்து ஊற்றிய பெத்தானியா மரியாளை நமக்கு நினைப்பூட்டுகிறது. தன் அழகு, வாலிபம், கல்வி, குடும்பச் சிறப்பு எல்லாவற்றையுமே அன்பன் இயேசுவின் நாமத்தின் மகிமைக்காக தாரை வார்த்துக் கொடுத்தார். அம்மையார் நிறுவிய உடுவில் மகளீர் கல்லூரியின் 175 வது நிறைவு தினத்தை கொண்டாட முற்படுகின்ற பொழுது ஹரியட் வின்சிலோவை நமக்கு தந்த இறைவனைப் போற்றுவோம். அவரது அன்புக் கணவர் மைரன் வின்சிலோவின் பணிக்காக இறைவன் தாழ் பணிவோம்.

''அருமைக் கல்லூரியின் ஆதி மிஷனரி
தம்பதிகள் ஆவி கூடி இன்று
வானமண்டலத்தில் வாழ்த்
தொலி எடுப்பதை
ஞானக் கண்களால் நயந்து
நோக்கி
ஆறாயிரம் மைல் அப்பா
விருந்து.
ஆறாய் பெருகிய அன்பு வெள்
ளம் வாழ்க என்றே வாழ்த்து
வோம் கல்லூரி
வாழிய வாழிய வழி வழி
வாழிய

ஹரியற் வின்சிலோ அம்மையார் எழுதிய சில கடிதங்களை மொழி பெயர்த்து ஈண்டு தருகின்றோம்.

# எஸ். ஜே. எழுதுவது

கடந்த சில நாட்களில் ''நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் வழியாய் நமக்கு ஜெயம் கொடுக்கிற கடவுளுக்கு ஸ்தோத்திரம்'' என்று உரக்க கூறியிருப்பேன். அவருடைய மகோன்னத வேலைகளுக்கு அவரில்

(2ம்பக்க பார்க்க)



## வழியில்



அன்பினும் ஆர்வம் உடையவராய்
அகத்துறுப்பில் பண்பு உடையவராய் விளங்கிய - காந்திபோல்
அன்புள்ளம் கொண்ட நெஞ்சமதாய்
அனைவரையும் தாங்கியவர் தான் - தந்தை செல்வா

ஆதரிப்பார் இல்லா மக்களின் நிலையினை
ஆடித்தளரா உறுதியாக மாற்றிய - காந்திமகான் போல்
ஆதர்ஸத் தலைவனாய் வடகிழக்கு மாந்தர்க்கு
ஆணிவேராய் நின்றவர்தான் - தந்தை செல்வா

இன்னா செய்தாரை இன்புடன்
இனிதே அணைத்த வள்ளல் - மகான் போல்
இடுக்கண் இடையறாது வந்த போதிலும்
இலங்கை மக்கள் துயர் துடைத்த தூயவர் தான் - தந்தை செல்வா

ஈடில்லா வழிகாட்டி இன்புடன் வாழ
ஈகை கொண்டவர் காந்திமகான் போல்
ஈழமக்களின் வாழ்வில் விடியலைத் தேட
ஈழமண்ணினைக் காத்தவர் தான் - தந்தை செல்வா

உள்ளத்தால் பொய்யாதொழுகி நின்று - அகில
உலகத்தாருள் உறைந்து நின்ற - காந்தியைப் போல்
உயிர்களுக்காக உயிர்த்தியாகம் செய்து
உயரிய இனமாக சிந்தித்த சிந்தனையாளர்தான் - தந்தை செல்வா

எண்ணிய எண்ணியாங்கு எய்திழந்து
எய்கிய திண்ணியர் மகானைப் போல்
எள்ளி நகையாடிய அரசினரின்
எதிர்ப்பின் குரலாய் நின்றவர்தான் - தந்தை செல்வா

ஏற்ற தந்தையின் அரவணைப்பும்
ஏணி போல் நின்றவர் காந்தியைப் போல்
ஏற்ற காலத்தில் தந்தைப் பாசப் இன்றிய போதும்
ஏழையர் பிள்ளைகளின் தந்தை போல் நின்றவர்தான் - செல்வா

ஐயம் கொண்ட பிரிட்டிஷ் அரசின்
ஐக்கிய முன்னணிக்கு எதிராக நின்று
ஐக்கிய சத்தியாக் கிரகம் பேணிய அபிமான வீரர்தான் -
தந்தைசெல்வா

ஒறுத்தார் பலரைப் பொறுத்து
ஒற்றுமையின் சிகரமாக விளங்கிய – காந்தியைப் போல்
ஐக்கிய சத்தியாக் கிரகமாக விளங்கிய – காந்தியைப் போல்
ஒரே மொழிக் கொள்கை வேண்டும் என்ற
ஒரு வஞ்சகத்தை தூளாக்கிய தூதன் தான் - தந்தை செல்வா

கறுத்தின்னா செய்தார்க்கு மறுத்தின்னா செய்யாத
கருணைக் கடலாம் அண்ணல் காந்தியைப் போல்
கடுந்துயர் கொண்ட தமிழ் மக்கள் துன்பங்களை
கருணையினால் துடைத்தெறிந்தவர்தான் - தந்தை செல்வா

சட்டங்கள் காக்குதலும் - தெய்வ நெறி
சரியாக பேணுதலும் ஒழுக்கசீலமாம் என்ற காந்தியைப் போல்
சளைக்காமல் தமிழர்களின் உரிமையைக் காத்து
சட்டத்தால் தமிழ் இனமாக மாற்றியவர் தான் - தந்தைசெல்வா

வறிய நாடாம் இந்திய மண்ணின் மக்களுக்காய்
வழுவாத நிலையினின்று வாய்மை மொழிந்த காந்தியைப் போல்
வரலாற்றில் உயர்ந்து நின்று தமிழரின் குழப்பங்களை
வலையாகப் பின்னிய நரகத்தை பிரித்த வீரர்தான் - தந்தை செல்வா

துன்பங்கள் தம்மை அணுகி வந்த போதும்
துயரென்று எண்ணாமல் சிரித்த காந்தியை போல்
தூரமென்று எண்ணாமல் இலக்கை நேக்கியும்
தூசு என்றெண்ணி ஓட்டத்தை நிறைவு செய்த ஓட்டவீரர் தான்
- தந்தை செல்வா

அருட் சகோதரி. டெய்சி ஆசிர்வாதம்
தெல்லிப்பளை, ஊழியர்

## Silver Jubilee
### *OF THE UNIVERSITY OF JAFFNA*

The University of Jaffna will be celebrating its Silver Jubilee on the 4th of October 1999. In 1974 the S L F P Government in Sri Lanka, nationalized Jaffna College Undergraduate Department and Parameswara College, Thirunelvely, and made them the Jaffna Campus of the University of Sri Lanka. At that ine relationship between Jaffna College and the new University campus was rather strained. It is true even after twenty five years Jaffna College has not fully recovered from the tragic events that followed the take over of 1974.

But every Tamil person living in Sri Lanka today, is gratified that Jaffna University has completed twenty five years of educational service. During the past twenty five years the University faced many crisis Many times the question was asked whether it would survive as an autonomous institution.

Dr. Chandran Devanesan in his essay on the birth pangs of new University stated:-

> "The history of most institutions shows that they usually have to undergo an initial period of gestation beginning with the moment of the conception of the idea and lasting till conclusive labour pains briug them the birth as established organizations".

We are elated that the Jaffna University is now an established organisation. During the past twenty five years a series of remarkable academics guided the destiny of this institution under most challenging circumstances, Professors K. Kailasapathy, S. Vithiananthan, A. Thurairajah K. Kunaratnam and P. Balasundrampillai by dint of honest perseverance made it an important seat of learning and culture of Sri Lanka. They were men of intergrity and contributed their share to maintain its secular character.

Prof. Chandran Devanesan wrote-

> "Our University should be infused with secular spiri of tolerance. Where the student is exposed to the great thoughts of the great thinkers of the past and the present, no matter to what culture, ideological or religious backgrounds they belong'.

The higher educationl enterprize in Jaffna has a long histroy. The American Missionaries set up their University College at Vaddukoddai as early as 1823. Till the take over of 1974 there were various types of institutions imparting tertiary education at Vaddukoddai.

It is a matter of great satisfaction that outstanding issues between the Universitiy and Jaffna College have been rosolved and Jaffna College community is making its contribution to the development and growth of the University

No doubt' some of the eminent acdemics moved out of Jaffna during the past ten years. It is also a fact that affluent parents are sending their children to institutes in South Sri Lanka and abroad. The curfew imposed by the Government and the lack of basic amneties have affected academic life and cultural development in the University. Under these circumstances the University has done well to maintain high academic standards. During the past twenty five years Jaffna University has produced 789 doctors 2387 Science graduates 3119 Arts graduates 1163 Comerce graduates 73 Agricultural graduates and several graduates in oriental music and Dance

The secular character is guarded with utmost care and transperancy. The "Morning Star" congratulates the present Vice Chancellor, Prof: P. Balasundarampillai who is able to float the University under very stringent conditions and wish the University, academic development, cultural advancement, and social intergration in the new millenium.

## IN MEMORIAM



***V. N. Ayathurai -***
B. A. (Lond)
Former Deputy Principal
DRIEBERG COLLEGE
Who passed to the life beyond
On
**3rd April 1981**
precious for ever are memoires of you
In silence and prayer We remember you
Sadly missed by his wife
Sons, daughters
Sons in - law
daughters in - law
and grand children

MORNING STAR

## AN APPEAL

Dear Friends,

This is an appeal we are making to all friends of Jaffna Sri - Lanka and particularly to the readers of the 'Morning Star'. This paper as you know was established in 1841 and the second oldest paper in this country. (The oldest being the 'Ceylon Observer')

This is the only English newspaper that comes out of Jaffna even during these perilous times, giving news and views of the current situation in the peninsula. It has always had a Tamil Section and as a Tamil paper it has the reputation of being the oldest in the Island.

Despite increasing costs and hardships we have continued to publish this paper fortnightly. It has become necessary to set up a substantial endowment fund so that subsidies can be found from it.

This appeal comes to you to contribute liberally to this Endowment fund. To those living in Sri Lanka who contribute a sum of Rs 1000/- and those living abroad who contribute a sum of not less than US $ 100/ or £70/- (or equvalent) we will be happy to give life subscription for the paper. Cheques may be drawn in favour of —

The Morning Star a/c: S/A 16400 7600
Commercial Bank of Ceylon, Wellawatte, Colombo -6
or The Morning Star a/c C/A 727 (local Subscriptions o nly)
Bank of Ceylon. Jaffna

For further details and assistance you can contact the following

U. K: Mr. S. N. Nalliah
6. Ashcombe Road,
Wimbledon,
London S W 19 8 J R

U S A: Rev. Tom Blossom,
743, East Pleasant Run Parkway,
South Drive, Indianapolis,
IN: 46203—3914, U S A.

AUSTRALIA: Mr. Kingsely Thambiappah,
1. Curlew Place. Werribee 3030,
Victoria, Australia.

CANADA: Mr. J S Paul,
158, Lord Robert Drive,
Scarbrough,
ONT: M L K 3 W 9,
Canada.

COLOMBO: Mr. N. S. P. Thampoe,
Church House,
39, Fussels Lane,
Colombo — 06,
Sri Lanka.

| | | |
|---|---|---|
| S Nadarajah<br>Manager | A. A Paul<br>English Editor | Mrs K. Bavasingam<br>Tamil Editor |

Dear ........ ......... ....... ...

Please make me a life subscriber of the "Morning Star". I am enclosing a cheque for ...... ..............
S L Rs / Us $, /Aus. $ / £ / Indian Rupees drawn
in favour of Morning Star A / C No: ....................

My address: ......................................
......................................
......................................

Signature: ......................................

## Memorial Lecture

Professor. S Maheswaran Memorial Lecture was given by Professor Vijayakumar of the University of Peradeniya. It was read by Prof. V. T. Ganeshalingham on Tuesday the 30th March in the Chemistry lecture hall of the University of Jaffna. Prof. Vijayakumar wrote his lecture on Insecticidal Compounds from Sri - Lankan Plants. Due to trasnport difficulties Prof. Vijayakumar could not deliver the lecture.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka. News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. Diocesan Complex Vaddukoddai on Friday the of 9th April 1999 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.